Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/22**

Paper 2 Reading and Writing **May/June 2024**

INSERT **1 hour 45 minutes**

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **4** pages.

KI 326584/1
© UCLES 2024

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 1

**இளைஞர்களுக்கு நண்பர்களிடமிருந்தான எதிர்மறை அழுத்தங்கள்**

அன்று அமுதனது பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் இடையிலான கால்பந்தாட்டப் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். அமுதன் அதற்குத் தயாராகிக் கொண்டு இருந்தான். விமலனும், சங்கரும் அவனுக்கருகில் அவர்களது பள்ளிக்கான கால்பந்தாட்ட அணிக்கு உடைகளை அணிந்துகொண்டு இருந்தார்கள். விமலனும் சங்கரும் மிகவும் மெதுவான குரலில் மற்றவர்களுக்குக் கேட்காத வகையில் அமுதனுக்கு ஏதோ கூறிக்கொண்டிருந்தனர். இருவரது முகங்களிலும் வெறுப்பும், கோபமும் தெரிந்தது. “கால்பந்தை பாலாவுக்கு இன்று கிடைக்காதபடி நாம் மூவருமாக மறிக்க வேண்டும். பாலா எப்போதும் ஆசிரியர்களது செல்லப் பிள்ளையாக கால்பந்து விளையாட்டில் நல்ல பெயரைப் பெற்றுக் கொள்கிறான்” என்று சங்கர் கூறியதை விமலன் ஆமோதித்தான். அமுதனுக்கு இதில் உடன்பாடு இல்லாவிட்டாலும் தனது நண்பர்களின் சொல்லை மீறி நடக்கப் பயந்து, அவர்களை அனுசரித்து நடக்க உடன்பட்டான். விளையாட்டு தொடங்கியபோது விமலனும், சங்கரும் தமது அணிக்கான ஒருமைப்பாடைச் சிறிதளவும் நினைத்துப் பார்க்காமல் விளையாடத் தொடங்கினார்கள். அவர்களது இச்செயல் அமுதனை விளையாடும்போது தடுமாற்றமடையச் செய்தது. மனக்குழப்பத்திற்கு ஆளான அவனால் நன்கு விளையாட முடியாமல் போனது.

இதைப் போன்ற சம்பவங்களை நாம் அடிக்கடித் தினசரி வாழ்க்கையில் பார்க்கிறோம். இளைஞர்கள் பொதுவாகப் பெற்றோர்களோடு செலவழிக்கும் நேரத்தை விட, நண்பர்களோடு செலவழிக்கும் நேரம் மிகவும் அதிகமாக இருக்கும். நண்பர்களுக்கிடையில் எதிர்பார்ப்புகளும் வற்புறுத்துதல்களும் நடக்கும்போது ஒருவருக்கொருவர் எதிர்மறையான தாக்கங்களைச் சந்திக்க நேரும். இதனை ஆங்கிலத்தில் பியர் பிரஷர் (Peer pressure) என்று கூறுவார்கள்.

சக நண்பர்களைப் போல் உடுத்துதல், உண்ணுதல், பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்குவது என்று பல வகைகளில் மறைமுகமாக அழுத்தங்கள் ஒருவர் மீது திணிக்கப்படும். கடைகளில் திருடுதல், மது அருந்துதல், புகைபிடித்தல், வாகனத்தை வேகமாக ஓட்டுதல் போன்றவை நேரடியாக ஒரு இளைஞர் மீது திணிக்கப்படும் அழுத்தங்களாக இருக்கும். இத்தகைய அழுத்தங்களைச் சந்திக்க முடியாதவர்கள் உளவியல் ரீதியில் பாதிப்படையக் கூடும். பல இளைஞர்கள் இத்தகைய மன அழுத்தங்களைப் பெற்றோர்களோடு பகிராமல் தமக்குள் வைத்துக்கொள்வார்கள். சிலர் புத்திசாலித்தனமாகத் தமது நண்பர்கள் குழுவை விட்டு விலகித் தமக்கு ஒத்துவரக்கூடிய வேறு ஒரு நண்பர்கள் குழுவிற்குச் சென்று சேருவார்கள். எதிர்மறை அழுத்தங்கள் வரும்போது குடும்பத்திலுள்ள மூத்தவர் ஒருவரது ஆலோசனையைப் பெறுவது மிகவும் சிறந்தது. இளையவர்கள் தமக்கு ஏற்றதாக அமையாத எந்தவொரு அழுத்தத்துக்கும் மறுப்புத் தெரிவிக்கப் பழகுதல் மிகவும் அவசியமாகும்.

சுயநம்பிக்கையும், விழிப்புணர்வும் உள்ள இளைஞர்கள் மனதளவில் பலசாலிகளாக இருப்பார்கள். அத்தகைய இளைஞர்கள் தமது வாழ்க்கைக்கான வெற்றிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பதிலே கவனமாக இருப்பார்கள். இவர்கள் நண்பர்களிடமிருந்து வரும் எதிர்மறைத் தாக்கங்களிலிருந்து விலகிச் செல்வதிலே மிகுந்த திறமைசாலிகளாகத் திகழ்வார்கள். நண்பர்களைத் திருப்திப்படுத்துவதைவிட, தமது சொந்த நலனில் அக்கறை கொண்ட இத்தகைய இளைஞர்கள், வாழ்க்கையில் எளிதாக வெற்றிபெறுவார்கள் என்பது நிச்சயம்.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

### இளைஞர்களுக்கு நண்பர்களிடமிருந்தான நேர்மறை அழுத்தங்கள்

நண்பர்களிடமிருந்தான அழுத்தங்கள் எதிர்மறையாக இருப்பது போல் அவை நேர்மறையானதாகவும் அமையலாம். பள்ளியில் படிக்கும் ஒரு பாடம் மிகவும் கடினமாகவும் விருப்பமில்லாததாகவும் இருந்தால், அப்பாடத்தில் திறமையுள்ள நண்பரொருவர் உங்களை வற்புறுத்தித் தனக்கருகில் இருக்கச் செய்து, அப்பாடத்தை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் விளக்குதல் நேர்மறையான அழுத்தத்துக்கு உதாரணமாக இருக்கும். விருப்பமற்ற ஒரு பாடத்தைக் கற்றல் என்பது எப்போதும் மன அழுத்தத்தைத் தரும். ஆனாலும், தகுந்த நட்பு வட்டத்துக்குள் இருப்பவர்களுக்கு அந்த அழுத்தம் எதிர்காலத்துக்குப் பயனளிப்பதாகவும், மகிழ்ச்சியான முடிவைத் தருவதாகவும், நட்பை உறுதிப்படுத்த உதவுவதாகவும் இருக்கும்.

ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரியும் செல்வி குழந்தைகளுக்கு இடையில் இருக்கும் போட்டி மனப்பான்மையை வைத்து அவர்களது நடத்தை சார்ந்த அணுகுமுறைகளைத் திருத்துவதாகக் கூறினார். “எனது மாணவர்கள் எல்லோரும் நான்கு வயதிற்குக் குறைந்தவர்கள். இந்த வயதில் அவர்களைத் திருத்துவது மிகவும் எளிது. யாராவது சற்றுக் குறும்பாக நடந்தாலும், ‘ஆதித்யாவைப் பாருங்கள். எவ்வளவு அமைதியாகவும் சாந்தமாகவும் அந்த இடத்தில் புத்தகத்தோடு அமர்ந்துள்ளான்’, என்று கூறினால், மற்ற எல்லோரும் அவரவர் இடத்திற்குச் சென்று அமர்ந்து ஆதித்யாவைப் போன்று புத்தகத்தை வாசிப்பார்கள். தங்களையும் நான் கவனிக்கிறேனா, தங்களைப் பற்றியும் நான் புகழ்ந்து பேசுவேனா என்பது போன்ற எதிர்பார்ப்போடு அவர்களது கண்கள் புத்தகத்திலிருந்து அடிக்கடி என்னை நிமிர்ந்து பார்க்கும்” என்று கூறினார்.

தமது பிள்ளைகள் நல்ல நண்பர்களை வைத்திருக்கிறார்களா என்பதில் பெற்றோர் எப்போதும் கவனமாக இருப்பார்கள். திவ்யா தனது மகள் அபிக்கும் அவளது தோழிக்கும் இடையில் நடந்த உரையாடல் ஒன்றைப் பற்றிக் கூறி, நல்ல நண்பர்களின் அவசியத்தை விளக்கினாள். “ஒருமுறை வண்டியில் எனது மகளையும் அவளது நெருங்கிய தோழியையும் அழைத்துக்கொண்டு பள்ளி விழாவொன்றுக்குச் செல்லவேண்டி இருந்தது. அப்போது முன் இருக்கையில் எனக்கு அருகில் அபி அமர்ந்து இருந்தாள். அவள் பின்னால் திரும்பித் தனது தோழியைப் பார்த்து கவிதா என்று அழைக்கப்படும் அவர்களது வகுப்பு மாணவி கடந்த வாரம் சுத்தமான உடைகளை உடுத்தவில்லை என்றும் சரியாகத் தலை வாரி பள்ளிக்கு வரவில்லை என்றும் கூறினாள். அதனால், அவளுக்கருகில் செல்லத் தயக்கமாக இருந்தது என்றும் கூறினாள். நான் எனது மகளின் பிழையைச் சுட்டிக்காட்டி அவளைக் கண்டிப்பதற்கு முன், பின் இருக்கையில் இருந்த அபியின் தோழி அவளை வெளிப்படையாகக் கண்டித்தாள். அப்படி இன்னொருவரைப் பற்றிப் பேசுவது தவறு என்பதைச் சுட்டிக்காட்டினாள். கவிதாவின் வீட்டில் துணி துவைக்கும் இயந்திரம் பழுதடைந்திருக்கக்கூடும் அல்லது அவளது பெற்றோர்கள் தற்காலிகமாக எங்காவது சென்றிருக்கக்கூடும். அல்லது, கவிதா தனது கல்வி சம்பந்தமான மன அழுத்தத்தை யாருடனும் பகிர்ந்து கொள்ளாமல் இருக்கக்கூடும் என்றும் விளக்கினாள்.

அவள் பேசி முடித்ததும் சற்று நேரம் அபி அமைதியாக இருந்தாள். பின்னர் என் மகள், நாளை கவிதாவிடம் சென்று அவளுக்கு ஏதாவது உதவிகள் தேவையா என்று கேட்க வேண்டும் என்று கூறினாள். என் மகளின் பிழையைச் சுட்டிக் காட்டிய அவளது தோழி நேர்மையானவள் என்பதையும், மற்றவர் நலனில் அக்கறை உள்ளவள் என்பதையும் நான் உணர்ந்து மகிழ்ச்சி அடைந்தேன்” என்று கூறினார்.

அகிலா வார இறுதி நாட்களில் உடற்பயிற்சிக்கூடம் செல்வதுண்டு. எப்படி உடற்பயிற்சியில் அவளுக்கு ஆர்வம் வந்தது என்று கேட்டபோது, “பள்ளியில் உடற்பயிற்சி தொடர்பான விளம்பரத்தைப் பார்த்தேன். எனக்கு விளையாட்டில் ஈடுபாடு இல்லை. நான் உடற்பயிற்சியை எந்த வயதிலும் மேற்கொண்டதில்லை. அதனால், அதில் சேர நான் விரும்பவில்லை. ஆனால், எனது தோழி ராணிக்கு அதில் ஆர்வம் இருந்தது. என்னைத் தன்னுடன் ஆரம்பத்தில் துணைக்கு வருமாறு ராணி வற்புறுத்தினாள். அதன்படியே நானும் ராணியும் அதில் சேர்ந்தோம். நாட்கள் செல்லச் செல்ல எனக்கு அங்கு உடற்பயிற்சி செய்வது பிடித்தது. புதியவர்களோடு பழகி நட்பு கொள்வது நன்கு பிடித்துவிட்டது. எனது உடல் எடையில் எட்டு கிலோக்களைக் குறைப்பதற்கு இது உதவியது. ராணியின் ஊக்கத்தினால் நான் எனது உணவுப் பழக்கவழக்கங்களையும் சத்துணவு மிக்கதாகத் தற்போது மாற்றியுள்ளேன்” என்று கூறினாள். அகிலாவுக்கு ராணியால் கிடைத்த மறைமுகமான அழுத்தம் அவளைப் புதிய ஒரு துறையில் அடியெடுத்து வைத்து, அதில் தேர்ச்சிபெற உதவியது.

‘உன் நண்பன் யார் என்று சொல். நீ யாரென்று சொல்கிறேன்’ என்பது சான்றோர் வாக்கு. இளைஞர்களது தாழ்வும் உயர்வும் பெரும்பாலும் அவர்கள் சேரும் நண்பர்களைச் சார்ந்தது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.

© UCLES 2024